

தாம்பரம் மாநகர தி.மு.க. சார்பில் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் பகுதி கழகச் செயலாளர், மண்டல குழு தலைவர் டி.காமராஜ் வரவேற்புரையில் ஐந்தாவது மண்டல குழு தலைவர், பகுதி கழகச் செயலாளர் எஸ்.இந்திரன், கி.வேலுமணி, எஸ்.ஜி. கருணாகரன் ஆகியோர் முன்னிலையிலும் முப்பெரும் தலைப்புகளிலும் கழகப் பொருளாளரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். இதில் ரமண ஆதிமூலம், இ. மனோகரன் மலர், மு.கருணாநிதி, இரா. விஜயகுமார், ஈஷா நடராஜன், பி.கே. தாமஸ், டி.ஆர்.கோபி, முத்துமாறன், ஜெயசதிசீலன், கா.ராஜேஷ், எஸ்.கார்த்திக், ஜோதிகுமார், சே.சுரேஷ், ஜா.ரவிக்குமார், சிப்ஸ் மணி மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர், பொது மக்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில் தாம்பரத்தில் மாவட்ட மருத்துவர் அணி தலைவர் கிருத்திகா தேவி ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் இலவச பல்நோக்கு மருத்துவ முகாமை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கி வைத்தார். அருகில் கழக மருத்துவர் அணி தலைவர் கனிமொழி என்.வி.என்.சோமு, சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன், மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் செந்தில்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஆதிதிராவிடர் அணி நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில்

# ஆதிதிராவிடர் நலக்குழு சென்னை மண்டல செயல்வீரர்கள் கூட்டம்!

## ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருவள்ளூர், செப். 25

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுவின் சென்னை மண்டல நிர்வாகிகள், செயல்வீரர்கள் கூட்டம் பூந்தமல்லியில் நேற்று நடைபெற்றது. செயல்வீரர்கள் கூட்டத்திற்கு மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும், பூவிருந்தவல்லி தொகுதி எம்.எல்.ஏ.வுமான ஆ.கிருஷ்ணசாமி தலைமை தாங்கினார். நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை வரவேற்புரை ஆற்றினர்.

ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர் வி.பி.இராஜன் முன்னிலை வகித்தார் .

இந்தக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ., கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன .

இதில் சென்னை மண்டலத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை சிறப்பாக நடத்துவது, மகளிர் உரிமைத்தொகை ஆயிரம் ரூபாய் வழங்கி இந்தியாவுக்கே முன்மாதிரியாக திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தும், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில தலைவர், முன்னாள் அமைச்சர் க.சுந்தரத்திற்கு அண்ணா விருது வழங்கியதற்கு முதலமைச்சர் நன்றி தெரிவித்தும், மேலும் டிசம்பர் மாதம் சேலத்தில் நடைபெறும் மாநில இளைஞரணி மாநாட்டில் திரளாக கலந்து கொள்வது, ஆதிதிராவிட நலக்குழு மாவட்ட அமைப்பாளர்கள் அந்தந்த மாவட்ட செயலாளர்களிடம் கலந்து ஆலோசித்து ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் பகுதி அளவில் ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நியமித்து விரைவில் தலைமைக்கு தெரியப்படுத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர்கள் காயத்ரி ஸ்ரீதரன், மு.கதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் காஞ்சனா சுதாகர், த.எத்திராஜ் , வி. குமார், ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் ப.ச.கமலேஷ், ஆர்.ஜெயசீலன், தி. வே.முனுசாமி, பொன்.விஜயன், பூவிருந்தவல்லி நகர்மன்ற துணைத் தலைவர் ஸ்ரீதரன்,

ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர்கள் வெ.இன்பரசன், சி.ஏழுமலை, .எல்.எப்.பிமோகன், இ.இளம்பரிதி, புலியூர் டி.மோசஸ், சி.சுரேஷ், கா.சம்பத், சிலம்பு பன்னீர் செல்வம், தி.க.பாஸ்கரன், வி.புருஷோத்தமன், சி.சக்தி வேல் குமார், ஜெ.திவாகர், திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு நிர்வாகிகள் பா. ராமானுஜம், பி.கே.இ.கபிலன், கே.கேசவன், ப.அன்பு, ஜி.ஆசைதம்பி, ஞானசேகர், ஜெரோத்கிங்ஸ்லி, எஸ். வெங்கடேசன், க.அழகிரி மாவட்ட தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்துக் கொண்டனர் முடிவில் திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஏ.விமல் ஆனந்த, மாவட்ட தலைவரும், ஊராட்சி மன்ற தலைவருமான பாரிவாக்கம் வி.தணிகாச்சலம் நன்றி கூறினார்.

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! வெ.பரிமளம் - தலைமை! - கலைஞர் நூற்றாண்டு விழா:

# துறைமுகம் கிழக்கு பகுதி சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!

## அமைச்சர் கீதா ஜீவன் சாலையோரவாழ் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

சென்னை, செப்.25

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் கிழக்கு பகுதி கலைஞர் 100, 39-வது நிகழ்ச்சியாக "கலைஞர் என்றால் கொள்கை உறுதி! காலத்தின் இருளை துடைத்த பரிதி"!! எனும் தலைப்பில் நிகழ்ச்சி நாளை (26.09.2023 செவ்வாய் கிழமை) மாலை 4 மணியளவில், சென்னை, பிராட்வே, டான்பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெறுகிறது.

இந்நலத்திட்ட விழாவிற்கு 56-வது வட்ட மாமன்ற உறுப்பினர் வெ.பரிமளம் தலைமை வகிக்கின்றார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், எஸ்.இராஜசேகர், எஸ். முரளி, எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், ப.ஸ்ரீராமுலு, இசட்.ஆசாத், என்.பி.எம். சேக்அப்துல்லா, எம்.இப்ராஹிம்கனி, இரா.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எம்.வினாயகம், பா.பிரதீப் குமார், எல்.சம்பத்குமார் முன்னிலை வகிக்கின்றனர்.

துறைமுகம் கிழக்கு/ மேற்கு பகுதி கழக நிர்வாகிகள்: ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்நதானலட்சுமி. சி.ப. ஜெயராமன், மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம. முத்துக்குமார், கே.சரஸ்வதி, துறைமுகம்,மேற்கு வட்டகழக செலாளர்: எஸ்.சத்திய நாராயண், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், ஆ.நா. பார்த்திபன், க.கவியரசு, மா. ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி. ராமமூர்த்தி, பா.அண்ணா துரை, சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், டி.சதீஷ்குமார் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இந்நலத்திட்டம் வழங்கும் விழாவில் சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் சாலையோரவாழ் மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

மேலும், இவ்விழாவில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப. தாயகம்கவி, அ.வெற்றி அழகன், ஜோசப்சாமுவேல், இ. பரந்தாமன், முன்னாள் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன், மாமன்ற உறுப்பினர்கள்: ராஜேஷ் ஜெயின், கே.சரஸ்வதி, எல்.நவீன், ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

56, 56அ வட்டக்கழக செயலாளர் த.கதிரவன், எம்.பரத்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### வை.ம.அருள்தாசன் ஏற்பாடு! கோ.வி.செழியன் எம்.எல்.ஏ.வை நடுவராகக் கொண்டு

# திருவொற்றியூர் மேற்குப் பகுதியில் மாபெரும் சிறப்பு பட்டிமன்றம்!

## மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமை! - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, செப். 25-

திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா தொடர் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதன் தொடர்ச்சியாக வழக்கறிஞர் பகுதி கழக செயலாளர் வை.ம.அருள் தாசன் ஏற்பாட்டில் மாபெரும் சிறப்பு பட்டிமன்றம் மாவட்ட கழக செயலாளர் மாதவரம். எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் (20.09.2023 - புதன்கிழமை) அன்று மாலை 6 மணியளவில் எண்ணூர் கத்திவாக்கம் கடைவீதியில் நடைபெற்றது

நூற்றாண்டு விழா நாயகர் கலைஞர் திராவிட மாடல் முதல்வர் தளபதி ஆகியோர்களது நிலைத்த புகழுக்கு பெரிதும் காரணம் அய்யாவின் துணிவா? அண்ணாவின் கனிவா? எனும் தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு நடுவராக தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கோ.வி.செழியன் எம்.எல்.ஏ பங்கேற்றார்.

ஐயாவின் துணிவே காரணம் என்று கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் கருர் முரளி , தலைமை கழகச் சொற்பொழிவாளர் தூத்துக்குடி சரத் பாலா ஆகியோரும் அண்ணாவின் கனிவே காரணம் என்று கழக கொள்கை பரப்பு இணைச் செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, தலைமை கழக சொற்பொழிவாளர்கள் சைதை சாதிக் ஆகியோரும் உரையாற்றினர்.

மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆனந்தன் பகுதி அவைத் தலைவர் என்.திருசங்கு, வட்ட கழக நிர்வாகிகள் டி.எஸ்.மணி, க.பாலு, எஸ்.தாமரை, ர.மதன்குமார், டி.சேகர், க.ஜெயபிரகாஷ், லைலாண்ட் ஆர். முருகன். டி.கண்ணன், எஸ். தேவி, கே.சீனிவாசன், ஆர். பிரசாத், என்.சத்தியமூர்த்தி, பி.ரமேஷ், சி.சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

இந்நிகழ்வில் மாநில மீனவர் அணி தலைவர் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., கிழக்கு பகுதி கழக செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி., மத்திய பகுதி கழக செயலாளர் ஏ.வி.ஆறுமுகம் எம்.சி., தலைமைச் செயற்குழு உறுப்பினர் மிசா.பா.மதிவாணன் வி.இராமநாதன் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் , மாமன்ற உறுப்பினர்கள் எம்.சிவக்குமார் எம்.சி, பி.தமிழரசன் எம்.சி, கே.பி. சொக்கலிங்கம் எம்.சி, மு. மாணிக்கவேலன்,கே.பவுல், கி.கண்ணன், மாவட்ட பொருளாளர் எம்.ஆனந்தன் பகுதி கழக அவைத் தலைவர். என். திருசங்கு, பகுதி கழகத் துணைச் செயலாளர்கள் இ. குமரவேல், யூ.எஸ்.குறளரசன், ஏ.இந்துமதி பகுதி பொருளாளர் எம்.வஜ்ரவேல் வட்டச்செயலாளர்கள்/ மாமன்ற உறுப்பினர்கள் கே.பி.சொக்கலிங்கம் எம்.சி,கி.கண்ணன், ஆர்.தினேஷ்குமார் ஆர்.மோகனசுந்தரம் என். ராம்குமார் எஸ் ஆர் மலைராஜ்பொன், கோ. விஜயன், எஸ்.கணேஷ், பி.எஸ். சைலெஸ், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆர். டி.மதன்குமார், விளையாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன், மாணவரணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எஸ். தினேஷ் வேலன், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட பொறுப்பாளர் வலைத்தளம் எஸ். தாமரை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட பிரதிநிதி எம். சந்திரகுமார் நன்றி கூறுகிறார்.

### சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி –

# பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு நேர்காணல்!

## மாவட்ட அமைப்பாளர் எஸ்.சரவணன் அறிவிப்பு!

சென்னை, செப்.25-

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி பகுதி அமைப்பாளர் துணை அமைப்பாளார்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் குறித்து மாவட்ட அமைப்பாளர் எஸ்.சரவணன் அறிவிப்பு வருமாறு :

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின்படி, மாணவர் அணி செயலாளர், சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர், மயிலை த. வேலு எம்.எல்.ஏ. தலைமையில் சென்னை தென் மேற்கு மாவட்ட கழகத்திற்குட்பட்ட மயிலாப்பூர், கிழக்கு, மயிலாப்பூர் மேற்கு, தியகராயர் நகர் கிழக்கு, தியகராயர் நகர் மேற்கு ஆகிய பகுதிகளுக்கு மாணவர் அணி பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் வரும் 27-09-2023 புதன் கிழமை காலை 10.00 மணிக்கு சென்னை, ஆழ்வார் பேட்டை அலுவலகத்தில் நடைபெறுகிறது.

மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ். மோகன் முன்னிலையில் தலைமைக் கழகத்தின் சார்பில் மாநில துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன் மற்றும் பூர்ண சங்கீதா சின்னமுத்து ஆகியோர் நேர்காணல் நடத்துகிறார்கள்.

ஆகவே, நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை,மாணவர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கனவே பணியாற்றியிருந்தால், அது தொடர்பான புகைப்பட தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம். விண்ணப்பிக்காதவர்களும் நேரில் ஆவணங்களுடன் கலந்து கொள்ளலாம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள்

# பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்-அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (25.09.2023 - திங்கட்கிழமை) மாலை 6.30 மணியளவில் சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி.மகாலில் அவைத்தலைவர் கோ. ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் , மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.



உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி உத்திரமேரூர் ஏரிக்கரையில் மூன்றாம் ஆண்டு ஒரு லட்சம் பனை விதைகள் நடுதலை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் கெ. ஞானசேகரன், இரா.நாகன், பேரூர் செயலாளர் என்.எஸ். பாரிவள்ளல், பேரூராட்சி மன்ற தலைவர் பொன் சசிகுமார், விதைகள் தன்னார்வ தலைவர் பசுமை சரண், ஆர். வெங்கடேசன், எல்.சசிகுமார் உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

# சிம்சன் மோகன் மறைவு!

## தொ.மு.ச. பேரவை இரங்கல்!

சென்னை, செப்.25-

நீண்ட காலமாக சிம்சன் நிறுவனத்தில் பணியாற்றிய மோகன் உடல் நலக் குறைவால் நேற்று (24.09.2023) காலை 5 மணியளவில் சென்னை ஆதம்பாக்கம், பாலகங்காதர திலகர் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிம்சனில் தொழிற்சங்கத் தலைவராகப் பணியாற்றி படுகொலை செய்யப்பட்ட பிரதாப் சந்திரன் அவர்களுக்கு உற்ற நண்பராகவும், தலைவர் கலைஞர் அவர்களுக்கு மிகவும் உற்ற தொண்டனாக இருந்து தன்னுடைய பணியை செயல்படுத்தியவர் சிம்சன் மோகன்.

தொ.மு.ச. பேரவை பொதுச்செயலாளராக காட்டூர் கோபால் இருந்த போதும் அவருக்கு வேண்டிய தொழிற்சங்கப்பணிகளில் துணையாக நின்றவர்.

அவருக்குப் பின் செ.குப்புசாமி அவர்களுடன் தொழிற்சங்கப் பணிகளில் உடனிருந்து பணியாற்றியவர். கழகம், தொழிற்சங்கம் என்ற ஒரே குறிக்கோளுடன் வாழ்ந்தவர்.

அவர் மறைவுச் செய்தி தொழிற்சங்கத்திற்கு ஒரு மாபெரும் இழப்பாகும். அவருடைய மறைவுக்கு தொ.மு.ச. பேரவையின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதோடு, அவரை இழந்து வாடும் அவருடைய துணைவியார், மகன்கள் ஆகியோருக்கு பேரவையின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தொ.மு.ச. பேரவை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.



திமுக மாநில ஆதிதிராவிட நலக்குழு சார்பில் சென்னை மண்டல செயல் வீரர்கள் கூட்டம் பூவிருந்தவல்லியில் மாநில ஆதிதிராவிட நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றினார். ஆதிதிராவிட இணைச் செயலாளர் வி.பி.ராஜன், மாவட்ட துணை செயலாளர்கள் காயத்திரி ஸ்ரீதர், மு.கதிரவன், பொதுகுழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், காஞ்சனா சுதாகர், வி.குமார், ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் ஜி.ஆர்.திருமலை, ப.ச.கமலேஷ், ஆர்.ஜெயசீலன், தி.வே.முனுசாமி, பொன்.விஜயன், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் விமல்ஆனந்த், ஆதிதிராவிட நலக்குழு தலைவர் வி.தணிகாசலம் உள்படஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.